# மணிமேகலை காப்பியத்தில் பெண்நிலைக் கருத்தியல்கள்

***ச. சிவகாமசுந்தரி***
பதிவுஎண்:21659, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி
பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது, திருச்சி

***முனைவர் தே. வினோத் ஐசக் பீட்டர்***
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது, திருச்சி
https://doi.org/10.5281/zenodo.15323831

***ஆய்வுச்சுருக்கம்***

*பத்தினி கடவுளாகிய கண்ணகி தன் பழம்பிறப்பு வரலாற்றை மணிமேகலைக்கு விரித்துரைக்கிறாள். பின்னர் வேற்றுருக்கொண்டு பிற சமயக்கருத்துக்களை அறிந்து வர வேண்டுகிறாள். மணிமேகலையும் "மாதவன்" வடிவு கொண்டு பிரமாணவாதி முதல் புதவாதி வரை, அனைத்துச் சமயவாதிகளின் கொள்கைகளைத் தெரிந்து கொள்கிறாள். பின் அங்குள்ள பௌத்தப் பள்ளியில் தவம் செய்யும் கோவலன் தந்தை மாசாத்துவானைக் காணுகிறாள். அவன்,தன்வரலாறு கூறியதுடன், மாதவியும் சுதமதியும் கச்சி மாநகர் சென்றுள்ளதை அறிவிக்கிறான். அங்கு மழையின்றி மக்கள் பசியால் வாடுவதை எடுத்துக் கூறி, அங்குச் சென்று பசிப்பிணி நீக்குமாறு வேண்டுகிறான். மணிமேகலை தன் உண்மை வடிவுடன் கச்சி மாநகர் அடைந்து, அந்நாட்டு அரசன் இளங்கிள்ளிக்கு நல்லறம் கூறி, நாட்டு மக்களின் பசிப்பிணி போக்குகிறாள். அங்குத் தீவ திலகைக்கும், மணிமேகலா தெய்வத்துக்கும் படிமமும் கோவிலும் எழுப்பப்படுகின்றன. அறவணர் , மாதவி, சுதமதி ஆகியோர் அவளது அறச்சாலை அடைந்தனர் . அவர் களை, மணிமேகலை இனிதே வரவேற்க, அடிகள் காவிரிபும்பட்டினம் கடலால் அழிந்ததை எடுத்துரைக்கிறார் . மணிமேகலை, தான் பல சமயக் கணக்கர் கொள்கைகளை அறிந்தும், அவற்றில் சிறப்பில்லை என்று உணர் ந்ததாகக் கூறுகிறாள். பௌத்த சமயத் தருக்க நெறிகளை அறவணர் அவளுக்குப் போதிக்கிறார். மணிமேகலை புத்தம் சரணம் கச்சாமிதர் மம் சரணம் கச்சாமி' சங்கம் சரணம் கச்சாமி என்ற மந்திரத்தை மும்முறை தியானம் செய்து தன் பவத்திறம் நீங்க நோன்பு மேற்கொள்கிறாள்.*

*மணிமேகலை சுதமதி மாதவி சித்ராபதி சாலி ஆதிரை காயசண்டிகை மாருதி விசாகை கோதமை போன்றோர் பெண் மாந்தர்களில் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களாக அமைந்துள்ளனர். ஆண் மாந்தர்களுள் ஆபுத்திரன், சாதுவன், உதயகுமரன் ஆகியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். சமூக முன்னேற்றத்திற்கும் பெண் ஏற்றத்திற்கும் பல கருத்துக்கள் இருந்தாலும் பெண்ணிய நோக்குடனும் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள அவலங்களை வெளிக்கொணரும் நோக்குடனும் அமைந்துள்ளது.*

**கருத்தியல்**

*கருத்தியல் என்பது உலகப்பார் வை கற்பனை (சமூகவியல்) இருப்பியல் (மெய்யியல்) ஆகியவற்றை விடக் குறுகிய கருத்துப்படிமம் ஆகும்.*

"Levels of subjective globalization ideologies, Imaginaries, ontologies perspectives on global development and Technology (Steger Manfred Bi Paul Jamescacademic) 2013 12 (1-2)

*கருத்தியலின் முக்கியமான நோக்கம் நெறிசார்ந்த சிந்தனைகள் ஊடாக மாற்றங்களை உண்டாக்குவதாகும். கருத்தியல்கள் பொது விடயங்களில் பயன்படுத்தப்படும் நுண்ணிலைச் சித்தனை* abstract Thought *முறைமைகள் எனலாம்.*

**கற்புநெறி**

*கணவன் இறந்துவிட்டால் அவனுடன் இறப்பவளே கற்பு உடையவள் என்ற கருத்து அக்கால மக்களிடையே நிலவியது.*

***"காதலனுற்ற கடுந்துயர் கேட்டும்***
***போதல் செய்யா வுயிரொடு நின்றே***
***பொற்கொடி மூதூர் ப் பொருளுரையிழந்து***
***நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்"***
***மணிமேகலை காப்பியம் (2.38-41)***

*என்று கோவலன் இறந்ததும் உடன் இறவாத தன் செயலை நாணமற்ற செயலாகத் தன் தோழி வயந்த மாலையிடம் மாதவி கூறுகிறாள்.*

*ஆதிரையன் கணவனாகிய சாதுவன் கணிகையர் பால் சென்று தன் கைப்பொருள் அனைத்தையும் இழந்த பின்னர் அறிவு தெளி கிறான். வணிகம் செய்து மீண்டும் பொருள் ஈட்டக் கப்பலில் சென்ற பொழுது சூறைக்காற்றால் கப்பல் உடைந்து விட நாகர் மலையை அடைந்து பிழைக்கிறான். கணவன் இறந்து விட்டதாகக் கேள்விப்பட்ட ஆதிரை உடன்கட்டை ஏறுவதற்குரிய ஈமப்படுக்கையை அமைத்துத் தருமாறு விராரைக் கேட்கிறாள். ஊராரும் அது சரி யானது என்பது போல் அவள் உடன்கட்டை ஏறுவதற்கு ஈமப்படுக்கையை ஏற்படுத்தித் தருகின்றனர். தீயானது அவளைச் சுடாதது கண்டு தீயும் கொல்லாத் தீவினையாட்டியேன் (16.35) என்று வருந்துகிறாள். அசிரீரி மூலம் தன் கணவன் உயிருடன் இருப்பதை அறிந்து தனது இல்லத்திற்குத் திரும்புகிறாள்.*

***"புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉம்***
***அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்***
***விரும்பினார் தொழூஉட் வியப்பின் னாயினள்"***
***(மணிமேகலை காட்டும் மனித வாழ்வு16.49 -51)***

*என்று ஆதிரையின் சிறப்பினை எடுத்துரைக்கிறாள். காயசண்டிகை கற்பிற் சிறந்த ஆதிரை கையால் முதற்பிச்சையை அமுதசுரபியில் பெறுமாறு மணிமேகலையிடம் காயசண்டிகை கூறுகிறாள். தன் கணவன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதுமே தானும் இறக்கத் துணிந்தமையால் அவள் பத்தினிப் பெண்டிரும் தொழுகின்ற சிறப்புப் பெற்றாள் என்பதனை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.*

*தவக்கோலம் தரித்த மணிமேகலையை மீண்டும் அவளது குலத் தொழிலாகிய கணிகைத் தொழிலுக்குத் திரும்பப் போவதாக நாடகக் கணிகையிடம் சித்ராபதி உரைக்கும் போது*

***"காதலன் வீயக் கருந்துய ரெய்திப்***
***போதல் செய்யாவுயிரொடு புலந்து***
***நளியிடும் பொய்கை யாடு நர் போல***
***முளி யெரி ப் புகூர் முதுகுடிப் பிறந்த***
***பத்தினிப் பெண்டிரல்லேம்***
***(மணிமேகலை. 18-11-15)***

*என்று கூறுகின்றாள்*

*எனவே கற்புடை மகளிரின் தகுதியாகக் கணவனுடன் உயிர்துறக்கும் செயல் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.*

**பெண்களின் நிலை**

*பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக வீறு நடை பயின்று சாதன படைப்பதே வளர் ச்சியாகும்.*

***"பழம் பண்பாட்டைப் போற்றும் மரபு வழி வந்த பிரான்ஸ் ஜெர் மனி, இத்தாலி, ஸ்பெயின் பெல்ஜியம் கிரீஸ் போன்ற நாடுகளில் கூடப் பெண்ணியம் மிக முயன்று வேரூன்றி விட்டதைக் குறிப்பிடத்தக்க வெற்றி என்றே கூற வேண்டும்".***
***("பெண்ணியம் போட்ட பதியங்கள்" ப.47)***

*பெண் மேலைநாடுகளில் ஆண்களுக்கு இணையாக சாதனை படைக்கின்றனர், என்பது மேற்காட்டிய கருத்தின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது. எனவே பெண்கள்*

*தங்களது திறமைகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக குடும்ப வாழ்வின் முன்னேற்றத்திற்கும் சமுதாய வளர் நிலைக்கும் பெண்ணிய வளர்ச்சி நிலை அமைந்துள்ளதை அறிந்து கொள்ள இயலும்.*

**காப்பியத்தில் அகத்தொடர்பு**

*உதயகுமரன் மணிமேகலையிடம் "நங்கையே! நீ நற்றவம் மேற் கொண்டதற்கான காரணம் தான் யாதோ" என்று துணிந்து கேட்கவும் செய்தான்.*

*இவன் முன் பிறவியில் என்னை விரும்பிய கணவனான இராகுலன் ஆவான். அதனால் இவனது திருவடிகளை நான் வணங்குதல் தகுதியுடையதாகும் என்று கருதிய மணிமேகலை அவனை வணங்கினாள். இதனை சாத்தனார்,*

***"என் அமர் காதலன் இராகுலன் - ஈங்கு இவன்***
***தன் அடி தொழுதலும் தகவு என்"***
***(உதயணன் அம்பலப்புக்காதை)***

*என்று குறிப்பிடுகின்றார். இவ்வரிகள் அகத்தொடர்பைச்சுட்டுகின்றன. மணிமேகலையின் நெஞ்சம் கட்டுப்பாடு இல்லாது அவனிடம் சென்றபோதும் இறையினை உடைய வளையணிந்த முன் கையினை இவன் பற்றினும் முற்பிறப்பில் கணவனாக இருந்தவனது பேச்சை மறுத்துரைத்தல் நன்மையன்று என நடுங்கிச் செய்வதறியாது சற்று நேரம் மயங்கி நின்றாள். மணிமேகலை தன்னுள் தொடர்பு கொள்வதாகச் சாத்தனார் எடுத்துரைக்கிறார்*

***"அறைபோய் நெஞ்சம் அவன்பால் அனுகினும்***
***இறைவனை முன்கை ஈங்கு - இவன் பற்றினும்***
***தொன்று காதலன் சொல் எதிர் மறுத்தல்***
***நன்றி அன்று"*** *(உ.அ.பு.காதை : 130-133)*

*என்று தன்னுள் மனிமேகலை கருதுவதும் அகத் தொடர் பே. கந்திற்பாவை வருவது உரைத்த காதையில் மணிமேகலை நீள் நெடுகத் தன்னுள் புலம்புவதாகச் சாத்தனார் எடுத்துரைக்கிறார். காஞ்சனன் என்னும் விஞ்சையனால் உதயகுமரன் வெட்டுண்டு கீழே கிடக்கிறாள். இதனைக் காணும் மணிமேகலை காஞ்சனின் மனைவி காய சண்டிகையின் வடிவில் தான் இருந்ததால் தானே உதயகுமரனுக்கு அக்கதி நேர் ந்தது என்று வருத்த முறுகிறாள். தனிமையில் கிடந்து மனம் அல்லாடும் மணிமேகலை "காதலனே முற்பிறப்பில் விழியில் நஞ்சைக் கக்கும் பாம்பு தீண்டியதால் உன் உயிர் பிரிந்தது. அப்போது நான் ஈமத்தீயில் விழுந்து என் உயிரை மாய்த்தேன். இப்பிறப்பில் உவவனத்தில் உன்பால் சென்ற என் மனத்தைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. அப்போது என் குல தெய்வம் மணிமேகலா தெய்வம் என்னை மணிபல்லவத் தீவுக்குக் கொண்டு சென்றது. அங்குப் புத்த பெருமானின் பீடிகை கண்டு என் முற்பிறப்பினை உணர்ந்தேன். மணிமேகலா தெய்வமும் என் பழம்பிறப்புணர்த்தியது. உன் பிறப்பையும் எனக்கு உணர்த்தியது. இவை யாவற்றையும் அறிந்த நான் பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும் உலக இயற்கை. அறம் இன்பத்தையும், பாவம் துன்பத்தையும் தரும் என்று உனக்கு எடுத்துக் கூறினேன். உன் தீவினை விலக நான் காய சண்டிகை வடிவம் எடுத்தேன். (மணிமேகலை மூலமும் உரையும்)*

***"காதல்***
***வைவாள் விஞ்சையன் மயக்கு உறுவெகுளியன்***
***வெவ்வினை உருப்ப விளிந்தனையோ என***
***விழுமக்கிளவியின் வெய்து உயிர்த்துப் புலம்பி"***
***(காந்திற் பாவை வருவது உரைத்த காதை***
***:22-25)***

*அழும் நிலையில் நிகழ்வது யாவும் அகத்தொடர்பாகும் "புலம்பு" என்ற சொல்லே தனிமை என்ற பொருள் பெறும் (தொல். சொல். உரி. நூற்பா-814) இங்கும் மணிமேகலை தனிமையில் தனக்குள் தான் கூறிக் கொள்வதாக இப்பகுதி விளங்குகிறது. மாற்றாரிடம் சொல்ல வழியின்றித் துறவியாகிய மணிமேகலை தன்னுள் நிகழ்த்தும் இக்கருத்து பரி மாற்றம் அகத்தொடர் பின் வகையாகும்.*

**பெண்டிர் கடவுளைத் தொழாமை**

*கணவனைத் தவிர பிற கடவுளை வழிபடாது இருக்கம் பெண்களே கற்புடையவராகக் கருதப் பெறுவர் என்பதனை*

***“கன்னிக் காவலுங் கடியிற் காவலுங்***
***தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்***
***நிறையிற் காத்துப் பிறர் பிறர் க் காணாது***
***கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்***
***பெண்டிர் தங் குடியிற் பிறந்தானல்லள்”***

***(மணிமேகலை 18.98-102)***

*என்று சித்ராபதி உரைப்பதன் வாயிலாக நற்குடிப் பெண்டிர் கணவனைத் தவிர இறைவனையும் வழிபடார் என்ற கருத்தினை முன் வைக்கிறாள்.*

**காப்பியம் சுட்டும் பெண் உரிமை**

*ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது மணிமேகலை இக்காப்பியத்தில் பெண்களின் ஆடல், பாடல், அழகு உரிமைகள் மற்றும் அதன் பெருமைகள் எடுத்து இயம்பட்டுள்ளன.*

1. *அரசர் க்கு ஆடும் கூத்து*
2. *மக்களுக்கு ஆடும் கூத்து*
3. *துணைத் திறன்*
4. *யாழ் மீட்டால்*
5. *அகநாடகம், புறநாடகம்*
6. *மத்தளம் இயக்குதல்*
7. *சூழல் இசைத்தவி*
8. *பந்தாடுதல்*
9. *சமையல் கலை*
10. *நறுமணப்பொடியால் நன்னீயாடுதல்*
11. *உடம்பால் செய்யும் 64 கலைகள்*
12. *பிறர் கருத்தியதை அறியும் திறன்*
13. *சொல்வன்மை*
14. *எழுது கோலினால் எழில் பட வரையும் தொழில்*
15. *புக்கட்டுதல்*
16. *ஒப்பனைச் செய்தல்*
17. *மாலைக் கட்டும் திறன்*
18. *சோதிடம்*
19. *அரங்கேற்றம்காதை*

*முதலியவற்றை பெண்கள் கற்க வேண்டிய தொழில்களாக விளக்குகின்றது. மணிமேகலை காப்பியம் பெண்களின் உரிமைகளை அன்றே பதிவு செய்துள்ளது. மேலும் பெண்களின் சாதனைக்கு கல்வித் திறனுடன் கூடிய துணிவும் தன்னம்பிக்கையும் பெற்றுத் திகழ வேண்டும். என்பதை மேற்கட்டிய காப்பியத்தின் வாயிலாக கூறப்பட்டுள்ளது.*

**அரசியலில் பெண்ணுக்குரிய தண்டனைகள்**

*நிலையான எழுதப்படாத சட்டங்கள் பல நிறைந்ததே மன்னராட்சி அமைப்பு. பெண்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளும் வழக்கியலையும், வாழ்வியலையும் எதிரொலிக்கிறது. பெண்களுக்கு வழங்கப் பட்ட தண்டனைகளும் அத்தகையதே. காயசண்டிகையை பின் தொடர்கிறான் என தவறுதலாக எண்ணி அவளின் கணவன் காஞ்சனன் பின் தொடர்ந்த மணிமேகலையின் காதலன் உதயகுமரனைக் கொலை செய்கிறான். அரசனோ காஞ்சணன் குற்றமற்றவன் என்றும் இவ்வாறு கொலை நிகழ முதன்மைக் காரணியான மணிமேகலையைச் சிறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது ஆனால் அரசியோ அரசனிடம் முறையிட்டுச் சிறை மணிமேகலைக்குத் தகுதியானது இல்லை என வாதிட்டு விடுவிக்கிறாள். ஆனால் உண்மையில் அவளின் வஞ்சக எண்ணம் பொதுவெளி மக்களால் அடித்துத் துன்புறுத்தி உயிர் போகச் செய்வதேயாகும்.*

1. *ஊரார் அடித்துக் கொள்ளும்படிப் பித்துடையவள் ஆக்குதல்.*
2. *மணிமேகலை என்ன விரும்பினால் என அறிவியலால் கூற வைத்தல்.*
3. *போலி நோயைக் காரணம் காட்டி உணவிடாமல் இறக்கச் செய்தல்.*

*இம்மூன்று தண்டனைகளும் ஒரு பெண்ணால் ஒரு பெண் துறவிக்கு வழங்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். (சமுகவியல் நோக்கில் நீதி இலக்கியம்)*

***“பித்துடையவள் ஆக்குதல்***
***அங்கு அவள் தனைகூஉய் அவள் தன்னோடு***
***கொங்கு அவிழ் குழலாள் கோயிலுள் புக்கு ஆங்கு***
***அறிவு திரி ந்து இவ் அசல் நகர் எல்லாம்***

*எறிதரு கோலம் யான் செய்குவல் என்றே*
*மயல் பகை ஊட்ட மறு பிறப்பு உணர் ந்தாள்*
*அயர்ப்பது செய்யா அறிவினள் ஆகக்"*
*(மணிமேகலை)*

*என்று மணிமேகலைக்கு மயக்கம் மருந்தைக் கொடுத்து அவளுடைய அறிவைப் பித்துடையவளாக்க முயலுகிறாள் அரசமாதவி. காரணம் (பித்தர்களை தெருவின் நடுவே நிற்க வைத்து கல்லால் அடித்து பரிகாசம் செய்து நகைப்பதும் ஊரின் வம்பிற்கு இழுப்பதும் அந்நாள் வழக்கம்) இவ்வுரில் இருப்போர் அனைவரும் மணிமேகலையைப் பித்துடையவள் என்றுரைத்து அடித்துத் துன்புறுத்த வேண்டும் என்பதுவே. ஆனால் அவளோ மறுபிறப்பு உணர்ந்திருந்த காரணத்தினால் அறிவு வேறுபாடின்றி நடுவுநிலை திரியாமல் நின்றாள்.*

**ஒழுக்கத்தால் ஏற்படும் சமுதாய விளைவு**

*பெண்கள் ஒழுக்க சீர் கேடுகளில் ஈடுபடுத்தப்படும் பொழுது அப்பெண்ணுக்கு பிறக்கும் குழந்தை அழிக்கப்படுவதுண்டு அதனையும் தூண்டி வளரும் நிலையில் இருவருமே சமுதாயத்தில் பெரும் இன்னலை அடைகின்றனர். சமுதாயத்தில் அவர்களை நடத்தப்படும் விதமும் கேவலமாக அமைகின்றது. இதற்கு சாலி ஆபுத்திரன் கிளைக்கதை தக்க சான்றாகும். (மேலது)*

*ஆபுரத்திரன் தன்நிலை எவ்வாறாயினும் உயர் சிந்தனைகளோடு காணப்படுகிறான். அவ்வுரின் அந்தணர் வீடொன்றில் பசுவை வேள்வியலிடுவதை அறிந்து பிறரியா வண்ணம் இரவேடு இரவாக அப்பசுவை மீட்கிறான். கருத்துமோதல் நிகழ்கின்றது. தானாக வளர்ந்து புல்லை மேய்ந்து தனக்கும் பிறர்க்கும் பால்கொடுத்து உயிர்காக்கின்ற இப்பசு யாதொரு குற்றமில்லாதது பால் தருவதை தவிர வேறு குற்றம் தீங்கு விளைவிக்கும் வேள்வித்தீயில் தள்ளுவது முறையன்று என உயிர்க்கொலை குறித்து இரக்கப்படுகிறான்.*

*"அருமறை நல்றுல் அறியாது இகழ்ந்தனை*
*தெருமரல் உள்ளத்து சிறியை நீ சுவ்*
*ஆமகன் அதற்கு எத்தனை அறியாய்*
*மாமறை மாக்கள் வரும் குலம் கேண்மே"*

*மணிமேகலைக் காப்பியம் பிற உயிர்களுக்கு தீங்கு விளைவிக்ககூடாது என்ற உயரிய சிந்தனை கொண்டிருந்தாலும் அவளின் பிறப்பைக் காரணங்காட்டி சமுகத்திலிருக்கும் ஒதுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். பின்னாளில் தன் குலத்திலிருந்தே புறக்கணிக்கப்படுகின்றாள்.*
*(மணிமேகலை சாமிநாதன் நூல் நிலையம்)*

**முடிவுரை**

*காப்பியமைப்பில் பல பெண்கதை மாந்தர் கள் வந்தாலும் கூட பெண்நிலைக் கருத்தியல்களை வெளிப்படுத்துவதில் மணிமேகலை, சுதமதி, சாலி, விசாகை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். பெண் மாந்தர்களுக்கு நேரும் பெண் அவலச் செயற்பாடுகள் இதன் மூலம் அறியலாம்.*

**துணைநூற்ப்பட்டியல்**


1. சாமிநாத அய்யர் மணிமேகலை சாமிநாத அய்யர் நூல் நிலையம் சென்னை -2013
2. சிதம்பரானார். சாமி மணிமேகலை காட்டும் மனித வாழ்வு சிவகாமி சிதம்பரானார் இலக்கியநிலையம் சென்னை -94
3. சித்து. மா.சாலமன் பெண்ணியம் போட்ட பதியங்கள் உமா பதிப்பகம்
4. சீனிவாசன். ரா மணிமேகலை மூலமும் உரையும் அணியகம் பதிப்பகம் சென்னை
5. சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ) மணிமேகலை சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்
6. தங்கமணி மணிமேகலை நியு செஞ்சுரி பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு - ஆகஸ்ட்1988
7. தண்டபாணி துரை .(உ.ஆ) மணிமேகலை உமாபதிப்பகம் மண்ணடி, சென்னை-94
8. பெரியசாமி மணிமேகலை பெரியார் பல்கலைக் கழகம், சேலம் -11

9. மதிசங்கர். கோ சமூகவியல் நோக்கில்நீதி இலக்கியம் புதுவை பல்கழைக்கழகம் 1999
10. வேங்கடசாமி நாட்டார் ந.மு மணிமேகலை ஆராய்ச்சி துரைச் சாமிப்பிள்ளை. க. ஔவை சாராதா பதிப்பகம், ஜி-சாந்தி அடுக்கம் ராயப்பேட்டை, சென்னை
11. (Steger Manfred Bi Paul Jamescacademic) “Levels of subjective globalization and Technology 12

**Bibliography**


1. Manimegalai Moolamum Uraium, Vengadaswamynattaar Na.Mu, Duraisamy Pillai. Ka.avvai, Saratha Pathippagam, G Shanthi Adukkam, Rayappettai, Chennai
2. Manimegalai, Somasundaranar Po.Ve (URAI AASIRIYAR), Saiva Sidandha, Noorpathippu Kalagam;
3. Manimegalai, Dhandapani Urai, Umapayhippagam, Mannadi Chennai
4. Manimegalai Kattum Manitha Valvu, Chidambaranar Swami, Sivagami Chidambaranar Ilakkiya Nilayam, Chennai
5. Manimegalai, Thangamani, New Century, Chennai Mutharpathippu-August 1988
6. Manimegalai, Periyaswamy, Periyar University, Selam
7. Manimegalai, Anna Kannan, Uma Pathippagam, Kolalampur -2009
8. Manimegalai Moolamum Uraium, Srinivasan .R, Aniyagam Pathippagam, Chennai
9. Manimegalai; Kalam, Tholkkappiya Noolagam, Chennai
10. Gomathi Sangar, Samoogaviyal Nokkil, NeethiIlakkiyam, Puthuvai University 1999